செய்தி வெளியீடு dt: 12-02-18

## காரைக்கால் மேற்கு புறவழிச்சாலை

காரைக்கால் நகரத்தில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் மேற்கு புறவழிச்சாலை கீழகாசாக்குடியில் ஆரம்பித்து திருபட்டினம் புதுபாலம் வரை காரைக்காலில் மேற்கு புறமாக தலத்தெரு, கோவில்பத்து, புதுத்துறை, மேலஓடுதுறை, அக்கரைவட்டம், நிரவி ஆகிய வருவாய் கிராமங்களின் வழியாக சுமார் 8.30 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதல் பகுதி கீழகாசாக்குடி அம்மையார் நகர் அருகில் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து திருநள்ளார் ரோட்டை இணைக்கும் வகையில் சுமார் 3.00 கிலோ மீட்டர் நீளத்தில் 45 மீட்டர் அகலத்தில் ருபாய் 21.20 கோடி மதிப்பீட்டில் நான்கு வழி பாதையாக அமைக்கபட உள்ளது. இத்திட்டத்தின் பணியை மாவட்ட ஆட்சியர் திரு. R. கேசவன் இ.ஆ.ப. மற்றும் S.E.S. சேகர் பார்வையிட்டனர் — மேற்படி சாலையின் குறுக்கே 10 வாய்காலுக்கான சிறுபாலம் அமைக்கும் பணியும், மணல் கொண்டு அடித்தளம் அமைத்தல் மற்றும் மணல் + கிராவல் கலந்த சாலை அடித்தளம் செப்பணிடும் பணிகள் முதல் கட்ட வேலையாக செய்துமுடிக்கப்பட்டுள்ளன. அதன் மேல் பதப்படுத்தப்பட்ட கருங்கல் ஜல்லி கலவை கொண்டு சாலை அமைத்தல் மற்றும் தார் சாலை, சாலை நடுவே தடுப்புச்சுவர் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதுவரை ருபாய் 10.06 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட வேலை 30.04.2018 குள் முடிக்கப்படஉள்ளது. இந்த பணிக்காண நிதி உறட்கோ நிதி உதவி முலம் பெறப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த ரோட்டின் சிறப்பு அம்சம் பெட்ரோசில் மற்றும் சக்கேரவாண்டு என்னும் கெமிக்கல்லை 200 லிட்டர் தண்ணீரில் தலா 3G லிட்டர் வீதம் கலந்து ரோட்டில் தெளித்தால் கொண்டு அதன் மேல் தெளித்து ரோலரால் மேலே ஓட்டுகிறார்கள். இதன் மூலம் மண் Grip ஏற்படும் என்று கூறினார்கள்

(signature) 12/2/18